# வாசிப்பின் அவசியம்

பள்ளியில் தினமும் பலவிதமான படிக்கின்றோம். அவை அந்தந்தப் பாடங்கள் சம்பந்தப்பட்டவையாகும். இவற்றைப் படித்துவிட்டு நான் தினமும் படிக்கின்றேன் என்றால் தவறாகும். பள்ளிப் பாடங்கள் மட்டும் நம் அறிவை வளர்க்காது. பாடங்கள் சம்பந்தப்பட்ட மேலும் பல தகவல்களைப் பெற நாம் வேறு பல நூல்களை ................................ வேண்டியது அவசியமாகிறது.

ஒரு மொழியில்.................................... பெற அம்மொழியில் வெளிவந்துள்ள பல புத்தகங்களை வாசிக்க வேண்டும். அவ்வாறு வாசிப்பதனால் அம்மொழியில் நாம் புலமை பெற முடியும். மொழி வளத்தைப் பெருக்கி கொள்ள முடியும். ஒரு மொழியில் உள்ள பல புதிய ........................ அறிய அம்மொழி நூல்களை வாசிக்க வேண்டும். அத்துடன் அவற்றின் பொருளை உணர்ந்து சரியான முறையில் பயன்படுத்தவும் வாசிப்பு அவசியமாகிறது.

மொழி வளத்தைப் பெருக்கும் அதே வேளையில், ............................................ வாசிப்பதன் மூலம் வளர்த்துக் கொள்ள முடியும். பல துறைகளைச் சார்ந்த புத்தகங்களை வாசிப்பதால் அத்துறைகளைப் பற்றிய ................................ அறிந்துக் கொள்ள முடிகிறது. இதன் மூலன் நாம் தகவல் அறிந்த சமுதாயமாக மாற, வாசிப்பு துணைபுரிகிறது.

இந்த நவீன உலகில் மனிதன் இயந்திரமாக வழ வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வியந்திர வாழ்க்கையிலிருந்து மீண்டு .................................. பெறவும் வாசிக்கும் பழக்கம் உதவுகிறது. கதை, கட்டுரை, கவிதை, செய்யுள் போன்றவற்றை வாசிப்பதன் மூலம் அவற்றின் சுவையை உணர்ந்து இரசிப்பது மனதிற்கு இன்பத்தை அளிக்கின்றது. மேலும், நமது இவற்றை வாசிப்பதால் நமது பழங்கால ........................................................ என்றென்றும் இவ்வுலகில் நிலைத்திருக்கும். நமது தாய்மொழி தமிழ்மொழியும் பேணிக் காக்கப்படும்.

LIVEWORKSHEETS

சொந்தமாகக் கதை, கட்டுரை, கவிதை எழுத விரும்புகிறவர்கள் முதலில் அவை தொடர்பான பல நூல்களைப் படித்து அறிய வேண்டும். அப்போதுதான் சொந்தப் படைப்புகளைப் படைக்கும் போது அவை தரமானவையாக இருக்கும். பல தகவல்களைத் தன்னுடைய படைப்புகளில் புகுத்த முடியும். இதனால், மாணவர்களின் ................................................................ புத்தாக்கத்திறனையும் மேம்படுத்த முடியும்.

எனவே, வாசிப்பு நமக்கு எவ்வளவு அவசியமாகிறது என்பதை அறிய முடிகிறது. ''நூலளவே ஆகுமாம் ……………………………..'' என்பதற்கேற்ப பல நூல்களை வாசித்து நம் அறிவைப் பெருக்கிக் கொள்வோம். வாசிக்கும் சமுதாயமாக மாறுவோம் ; பயன் அடைவோம்.

படைப்பாற்றலையும் தகவல்களை வாசிக்க

சொற்களை இலக்கியங்கள் நுண்ணறிவு

புலமை மனமகிழ்வு பொது அறிவையும்

LIVEWORKSHEETS